DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.257/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமரேசன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | அய்யனார் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 28.04.2026

எதிரி ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2025-ம் தேதி மாலை சார்பு ஆய்வாளர் திரு. ஜெயபாலன், தலைமைக்காவலர் சந்திரசேகர் ஆகிய நாங்கள் பிடாரனேந்தல் பகுதியில் ரோந்து சென்றபோது எங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் கையில் சாக்குப்பையுடன் சுற்றித்திரிந்த நபரை பிடித்து சோதனை செய்தபோது அவர் பையில் இருந்து 26 blackpearl பிராண்டி பாட்டில்கள் இருந்தது. அவரை விசாரணை செய்ததில் எந்த அனுமதியும் இன்றி சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்தது தெரிந்தது. அவரிடம் இருந்த 26 blackpearl பிராண்டி பாட்டில்களை எடுத்து நிலையம் கொண்டு வந்து இரவு 9 மணிக்கு நிலைய குற்ற

எண்.36/2025, 4(1)(C) TNP amendment act ன்படி சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளருக்கு வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அழித்தல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி அழித்தல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் சார்பு ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன். நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதை காவல் நிலைய பொது நாள்குறிப்பேடில் பதிவு செய்துள்ளோமா என்றால் ஆமாம். பொது நாள்குறிப்பேட்டில் எத்தனை மணிக்கு ரோந்திற்கு சென்றோம் என்பதை பதிவு செய்துள்ளோமா என்றால் ஆமாம். மேற்படி பொது நாள்குறிப்பேடு பதிவுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிடாரனேந்தல் பகுதி பொதுமக்கள் நடமாடும் பகுதி என்று சொன்னால் நாங்கள் சென்றபோது 2,3 பேர்கள் இருந்தார்கள் ஆனால் நாங்கள் போனவுடன் இருட்டாக இருந்ததால் அவர்கள் சென்றுவிட்டார்கள். நாங்கள் உண்மையிலேயே ரோந்திற்கு சென்றிருந்தால் அதை பொது நாள்குறிப்பேட்டில் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்திருப்போம் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் இந்த வழக்கில் கண்ட புகார்தாரர் எங்களின் உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.